பொருளடக்கம்

அடிப்படை நம்பிக்கைகள்

பகுதி 1	முக்கிய அடிப்படைகள்	12
பகுதி 2	மார்க்கக் கல்வி	19
பகுதி 3	ஈமான், இஸ்லாம், இஹ்சான்	27
பகுதி 4	அல்லாஹ்வின் மீது நம்பிக்கை	32
பகுதி 5	மலக்குகள், வேதங்கள், தூதர்கள் மீது நம்பிக்கை	43
பகுதி 6	மறுமை மீது நம்பிக்கை	60
பகுதி 7	தவ்ஹீதும் ஷிர்க்கும்	71

தூய்மை சட்டங்கள்

பாடம் 1 தூய்மையின் சிறப்பும் விளக்கமும்	90
பாடம் 2 வுளூவின் சிறப்பும் முறையும்	91
பாடம் 3 வுளூ ஏற்கப்படுவதற்கான நிபந்தனைகள்	94
பாடம் 4 வுளூவின் ஃபர்ளுகள்	96
பாடம் 5 வுளூவின் சுன்னத்துகள்	99
பாடம் 6 வுளூ செய்பவருக்கான நற்செய்தியும் எச்சரிக்கையும்	100
பாடம் 7 காலுறைகள் மீது மசஹ் செய்வதின் சட்டங்கள்	102
பாடம் 8 வுளூவை முறிப்பவை	104
பாடம் 9 கடமையான குளிப்பின் சட்டங்கள்	104
பாடம் 10 தயம்மும் சட்டங்கள்	107
பாடம் 11 கழிவறைக்குச் செல்லும்போதுள்ள ஒழுக்கங்கள்	109

தொழுகை சட்டங்கள்

பாடம் 1 தொழுகையின் முக்கியத்துவம்	112
பாடம் 2 தொழுகை எப்போது கடமையாகும்?	113
பாடம் 3 தொழுகை நேரங்கள்	115
பாடம் 4 பாங்கு சொல்வதின் சிறப்புகளும் முறையும்	117
பாடம் 5 பாங்குக்குப் பதிலளிக்கும் முறை	121
பாடம் 6 தொழுகையின் நிபந்தனைகள்	125
பாடம் 7 இரண்டு ரக்அத் தொழுகை - ஒரு வருணனை	127
பாடம் 8 இமாமைப் பின்பற்றித் தொழும் முறை	138

பாடம் 9 ஃபர்ளு தொழுகைக்குப் பின் ஓத வேண்டிய திக்ர்கள் 141
பாடம் 10 தொழுகையின் முறையை விவரிக்கும் ஆதாரங்கள் 143
பாடம் 11 தொழுகையின் சுன்னத்துகள் 149
பாடம் 12 தொழுகையில் வெறுக்கத்தக்கவை (மக்ரூஹ் காரியங்கள்) 151
பாடம் 13 தொழுகையை முறிக்கக்கூடியவை 153
பாடம் 14 தொழுகையில் அனுமதிக்கப்பட்ட காரியங்கள் 154
பாடம் 15 ஜமாஅத் தொழுகையின் சிறப்பும் முக்கியத்துவமும் 155
பாடம் 16 ஜுமுஆ தொழுகையின் முக்கியத்துவமும் சட்டங்களும் 156
பாடம் 17 முக்கியமான சுன்னத் தொழுகைகள் 157
பாடம் 18 ளுஹா தொழுகை 159
பாடம் 19 இரவுத் தொழுகை (தஹஜ்ஜுத்) சுன்னத்துகள் 160
பாடம் 20 வித்ரு வாஜிபு 161

தினசரி திக்ர்களும் அதபுகளும்

பாடம் 1 தூக்கத்திலிருந்து விழித்தவுடன்.. 164
பாடம் 2 பல் துலக்குவது அழகிய நபிவழி 166
பாடம் 3 கழிவறைக்குச் செல்லும்போதுள்ள ஒழுக்கங்கள் 166
பாடம் 4 குர்ஆன் ஓதும் ஒழுக்கங்கள் 169
பாடம் 5 காலை மாலை திக்ர்கள் 172
பாடம் 6 உண்ணல் ஒழுக்கங்கள் 174
பாடம் 7 குடித்தல் ஒழுக்கங்கள் 176
பாடம் 8 ஆடை அணியும் ஒழுக்கங்கள் 178
பாடம் 9 வெளியே செல்லும்போதுள்ள ஒழுக்கங்கள் 179
பாடம் 10 வீட்டிற்குள் நுழைதல், வெளியேறுதல் ஒழுக்கங்கள் 181
பாடம் 11 ஸலாம் சொல்வதின் ஒழுக்கங்கள் 185
பாடம் 12 மற்றவர்களின் வீட்டிலோ அறையிலோ
நுழைவதற்கு அனுமதி கேட்பதின் ஒழுக்கங்கள் 188
பாடம் 13 தும்மல் வரும்போது 191
பாடம் 14 நோயாளியை நலம் விசாரிக்கச் செல்லும்போது 192
பாடம் 15 மஸ்ஜிதுக்குச் செல்லும்போது... 195
பாடம் 16 தூங்குவதற்கு முன்.. 198

அல்லாஹ்வை நினைவுகூர இன்னும் சில துஆக்கள் 205

இந்நூலைப் பாடமாக நடத்துவோரின் கவனத்திற்கு

1. பெரும்பாலும் இதன் பாடங்கள் கேள்வி பதில்கள் வடிவில் தரப்பட்டுள்ளன. ஒரு கேள்விக்கு முதலில் அதற்குரிய பதிலும், அதற்குக் கீழ் ஆதாரமும் உள்ளன. மாணவர்களின் வயதுக்கு ஏற்ப அவர்களை மனப்பாடம் செய்ய பழக்குங்கள். பெரிய மாணவர்கள் என்றால், ஆதாரத்தையும் மனப்பாடம் செய்ய வையுங்கள்.

2. வெறும் மனப்பாடம் செய்ய வைப்பதோடு நிறுத்திவிடாமல், ஒவ்வொரு பதிலையும் எளிமையாக விளக்குங்கள்.

3. கோடைக்காலப் பயிற்சி வகுப்புகள் போன்ற குறுகிய கால வகுப்புகள் என்றால், முழு புத்தகத்தையும் நடத்தி முடிக்க வேண்டாம். எத்தனை வகுப்புகள் நடத்த முடியும் என்பதைத் தீர்மானித்து, அதற்கேற்ப பாடங்களின் எண்ணிக்கையை வரையறுத்துக்கொண்டு நடத்துங்கள். எத்தனைப் பாடங்கள் நடத்தப்பட்டன என்பதை விட எந்தளவு மாணவர்கள் புரிந்து, மனப்பாடமும் செய்து, அதைச் செயல்படுத்தவும் தயாராகியுள்ளார்கள் என்பதே முக்கியம்.

4. மாணவர்கள் சலிப்படையும் விதத்தில் நடத்தாமல், அவர்களை மகிழ்ச்சிப்படுத்துங்கள். நடத்தப்படும் பாடங்கள் அவர்களுக்கு எளிமையானவை, இனிமையானவை என்பதைப் புரிய வைத்து, கடுமை காட்டாமல் பொறுமையுடன் நடத்துங்கள்.

5. ஒரே சமயத்தில் பல பாடங்களை நடத்தி முடிக்க வேண்டாம். கொஞ்சம் கொஞ்சமாக அகீதாவில் ஓரிரு பாடங்களையும், ஃபிக்ஹில் ஓரிரு பாடங்களையும், அதபு, திக்ர்களில் ஓரிரு பாடங்களையும் நடத்துங்கள்.

6. பாடங்கள் நடத்தும்போது மாணவர்களிடம் கலந்துரை யாடுங்கள். அவர்களிடம் கேள்விகள் கேட்டு, அவர்க ளைப் பேச வைத்து, பாடப் புத்தகத்திலிருந்து சில பக்கங்களைச் சப்தமாகப் படிக்க வைத்து, அவர்களின் சந்தேகங்களுக்குத் தெளிவான விளக்கம் கொடுத்து நடத்துங்கள்.

7. ஒவ்வொரு பாடத்தையும் முடித்தவுடன் அதை எப்படி வாழ்க்கையில் செயல்படுத்த வேண்டும் என்கிற ஆலோ சனைகளைக் கூறுங்கள். படித்ததின்படி செயல்படுமாறு ஆர்வமூட்டுங்கள்.

8. மாணவர்களின் பெற்றோர்களை அழைத்து, பாடங் களைப் பற்றிய விவரங்களைக் கூறி, வீட்டில் அவற்றைச் செயல்படுத்த குழந்தைகளுக்கு நினைவூட்டுமாறும் கூறுங்கள். இது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் இன்ஷா அல்லாஹ்.

9. ஆசிரியர் என்பவர் மாணவர்களுக்கு முன்மாதிரியாக நடப் பவர். எனவே, படித்துக்கொடுக்கும் பாடங்களைச் செயல் படுத்துவது ஆசிரியருக்கு மிக முக்கியம். ஸலாம் சொல் வதின் ஒழுங்குகளை நடத்திய ஆசிரியர், முதலில் அவர் அதைப் பின்பற்றுகிறாரா என்று மாணவர் கவனிப்பார். சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு இருந்தால், நடத்தப்படும் பாடங்கள் மாணவருக்குப் பலன் தராது.

10. தம்முடைய மாணவர்களுக்காக துஆ செய்வது முக்கியம். அவர்கள் கற்றதின்படி செயல்பட்டு அல்லாஹ் வின் அன்பையும் திருப்தியையும் பெற வேண்டும் என்ற ஏக்கத்துடன் அல்லாஹ்வின் முகத்திற்காக பாடம் நடத்தி துஆ செய்ய வேண்டும்.

பகுதி 1

முக்கிய அடிப்படைகள்

பாடம் 1

மூன்று கேள்விகள்

1. உங்கள் இறைவன் யார்?

என் இறைவன் (ரப்பு) அல்லாஹ்தான்.

காரணம், அவனே ஆட்சி அனைத்துக்கும் அதிபதி; அவன் தான் படைப்பாளன், வாழ்வாதாரம் கொடுப்பவன், உதவுகிறவன்; தனது படைப்புகள் அனைத்தின் வணக்கத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் முழு உரிமையாளன்.

ஆதாரம்: அல்லாஹ் கூறுகிறான், சூரா அல்அஃராஃப் 7:54

إِنَّ رَبَّكُمُ اللَّهُ

நிச்சயமாக உங்கள் இறைவன் அல்லாஹ்தான்.

பகுதி 2

மார்க்கக் கல்வி

பாடம் 1

மார்க்கக் கல்வியின் முக்கியத்துவம்

طَلَبُ الْعِلْمِ فَرِيضَةٌ عَلَى كُلِّ مُسْلِمٍ

கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கட்டாயக் கடமை என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பு: அனஸ் ؓ, ஆதாரம்: சுனன் இப்னுமாஜா 228)

மறக்கக்கூடாதவை

1. கல்வி என்றால் இங்கு மார்க்கக் கல்வியாகும். காரணம், அதைக் கற்றுக்கொள்வதுதான் ஒவ்வொருவருக்கும் கடமை. மற்ற கல்வியைப் பொறுத்தவரை சிலர் கற்றும், சிலர் கற்காமலும் இருந்தால் கூட குற்றமாகாது.

   உதா: உலகக் கல்வியில் சிலதைக் கற்றும் சிலதைக் கற்காமலும் இருக்கலாம்.

பகுதி 3

ஈமான், இஸ்லாம், இஹ்சான்

மார்க்கத்தில் மூன்று படித்தரங்கள் உள்ளன.

இஸ்லாம், ஈமான், இஹ்சான். இவை ஒவ்வொன்றையும் தனித் தனியாகக் குறிப்பிடும்போது மார்க்கத்தின் எல்லா விஷயங் களையும் அது உள்ளடக்கும். ஒன்றுடன் ஒன்று சேர்ந்து வந்தால், ஈமான் என்பது நம்பிக்கைகளையும், இஸ்லாம் என்பது செயல்களையும், இஹ்சான் என்பது அல்லாஹ்வின் கண்காணிப்பையும் குறிக்கும். இவற்றில் இஸ்லாம் என்பது தான் ஆரம்பப் படித்தரம். இஸ்லாம் கூறும் கட்டாயக் கடமை களைச் சரியாக நிறைவேற்றுபவரே முஸ்லிம். ஈமான் என்பது இஸ்லாமை விட உயர்ந்த படித்தரம். கட்டாயக் கடமைகள் மட்டுமின்றி, உபரியான நற்செயல்களையும் செய்பவர், முஸ்லிம் என்பதுடன் மு்மின் என்ற உயர்வைப் பெறுகிறார். இஹ்சான் என்பது நற்செயல்கள் அனைத்தையும் அல்லாஹ் வைப் பார்க்கிற எண்ணத்துடனோ, அல்லாஹ் நம்மைப் பார்க்கிறான் என்ற எண்ணத்துடனோ செய்வதாகும். இப்படிப் பட்டவர் முஸ்லிம், மு்மின் மட்டுமின்றி, முஹ்சின் என்ற மிக உயர்ந்த படித்தரத்தை அடைகிறார்.

பகுதி 5

மலக்குகள், வேதங்கள், தூதர்கள் மீது நம்பிக்கை

பாடம் 1

மலக்குகள்

1. மலக்குகளை எப்படி நம்ப வேண்டும்?

"மலக்குகள் ஒளியால் படைக்கப்பட்டவர்கள். அல்லாஹ்வுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த அடிமைகள். அவனுடைய கட்டளைகளை அப்படியே செய்பவர்கள். அவனுக்கு மாறு செய்யவே மாட்டார்கள்" என்று நம்ப வேண்டும்.

(ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம் 5314)

2. அல்லாஹ் எத்தனை மலக்குகளைப் படைத்துள்ளான்?

எண்ணிக்கையில் அடங்காத அளவுக்கு அதிகமான மலக்குகளை அல்லாஹ் படைத்துள்ளான். அவர்கள் எத்தனை பேர் என்பதை அவனே அறிவான்.

பகுதி 6

மறுமை மீது நம்பிக்கை

பாடம் 1

மறுமை வாழ்க்கை

1. நமது மறுமை வாழ்க்கை எப்போது ஆரம்பிக்கிறது?

மறுமை வாழ்க்கை நமது உயிரைக் கைப்பற்ற மரணத்தின் மலக்கு வந்தவுடன் ஆரம்பிக்கிறது. அதிலிருந்து நடை பெறும் ஒவ்வொரு விஷயமும் மறுமையைச் சேர்ந்ததுதான். மரணம் என்பது சிறிய மறுமை. உலகம் அழிவதும் அதற்குப் பின் நடப்பதும் பெரிய மறுமை.

2. மரணத்திற்குப் பின் நமது நிலை என்ன?

மரணத்திற்குப் பின் நாம் பர்ஸக் என்ற உலகில் இருப்போம். பர்ஸக் என்றால் தடுப்பு என்று பொருள். இந்த உலகிற்கும் மறுமைக்கும் இடையே உள்ள இந்த பர்ஸக் வாழ்வைத்தான் நாம் கப்ரு வாழ்க்கை என்கிறோம்.

பாடம் 1

தூய்மையின் சிறப்பும் விளக்கமும்

1. தூய்மையின் சிறப்புகள் என்ன?

அல்லாஹ் கூறுகிறான், சூரா அல்பகறா 2:222

إِنَّ اللهَ يُحِبُّ التَّوَّابِينَ وَيُحِبُّ الْمُتَطَهِّرِينَ

நிச்சயமாக அல்லாஹ் (பாவத்தைவிட்டு) வருந்தி மீளுகிற வர்களை விரும்புகிறான்; சுத்தமாக இருப்பவர்களையும் விரும்புகின்றான்.

நபி ﷺ கூறினார்கள்:

الطُّهُورُ شَطْرُ الْإِيْمَانِ

தூய்மை ஈமானில் பாதியாகும். *(ஸஹீஹ் முஸ்லிம் 381)*

2. தூய்மை என்றால் என்ன?

சிறுநீர், மலம், காற்றுப் பிரிதல், இச்சை நீர் வெளியாகுதல், ஆழ்ந்த உறக்கம், ஒட்டக இறைச்சி உண்ணுதல் ஆகிய வற்றால் ஏற்படும் சிறுதுடக்கையும், இந்திரியம் வெளியா குதல், ஆண் பெண் மறைவிடங்கள் இணைதல், மாதவிடாய், பிரசவத்தீட்டு ஆகியவற்றால் ஏற்படும் பெருந்துடக்கையும் மார்க்கம் காட்டிய முறைப்படி நீக்கிக்கொள்வதற்குத் தூய்மை எனப்படும்.

3. சிறுதுடக்கை நீக்குவது எப்படி?

சிறுதுடக்கை வுளூ செய்வதின் மூலம் நீக்க வேண்டும். அதாவது, முகம், முழங்கைகள் வரை இரு கைகள்,

கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள், "ஆம்; நீங்கள் வுளூ செய்ததின் அடையாளமாக (வுளூவின்) உறுப்புகள் பிரகாசிப்பவர்களாய் என்னிடம் வருவீர்கள். இந்த அடையாளம் வேறெவருக்கும் இருக்காது" என்று கூறினார்கள்.

(அறிவிப்பு: ஹுதைஃபா இப்னு அல்யமான் ؓ, ஸஹீஹ் முஸ்லிம் 418)

3. எவ்வாறு வுளூ செய்வது?


1. வுளூ செய்கின்ற எண்ணத்துடன்,

بِسْمِ اللهِ


'பிஸ்மில்லாஹ்' (அல்லாஹ்வின் பெயரால்) என்று கூறி,மூன்று முறை இரு கைகளையும் மணிக்கட்டு வரை கழுவ வேண்டும்.



2. பற்களைத் தேய்த்து சுத்தம் செய்ய வேண்டும். வலது கையில் ஒரு பிடி தண்ணீர் அள்ளி வாய் கொப்பளித்து அதே நீரில் மூக்கிற்கும் செலுத்த வேண்டும். மூக்கை இடது கை விரல் களால் சுத்தம் செய்ய வேண்டும். இதையும் மூன்று முறை செய்ய வேண்டும்.



3. முகம் முழுவதையும் மூன்று முறை கழுவ வேண்டும்.



பாடம் 10

தயம்மும் சட்டங்கள்

1. வுளூவுக்கோ குளிப்புக்கோ தண்ணீர் பெறாவிட்டால் என்ன செய்ய வேண்டும்?

வுளூவுக்கோ குளிப்புக்கோ தண்ணீர் பெறாவிட்டால் தயம்மும் செய்துகொள்ள வேண்டும். அதாவது, சுத்தமான மண்ணின் மீது, அல்லது தரையுடன் சேர்ந்திருக்கும் சுவரின் மீது இரண்டு கைகளையும் ஒரு முறை அடித்து, முகம் மற்றும் இரு கைகளின் மணிக்கட்டு வரை தடவிக்கொள்ள வேண்டும்.



2. தயம்மும் செய்கிற ஒழுங்கு என்ன?

1. நிய்யத் செய்தல். அதாவது, பெருந்துடக்கு அல்லது சிறுதுடக்கு ஆகியவற்றில் எந்தக் காரணத்திற்காகச் செய்கிறோமோ அதை நினைத்துக்கொள்தல்.

2. பிஸ்மில்லாஹ் கூறுதல்.

3. மண்ணில் கைகளை அடித்து, அதை ஊதித் தட்டிவிட்டு, முகத்தையும் மணிக்கட்டு வரை இரண்டு கைகளையும் தடவிக்கொள்தல்.

7. நிய்யத் என்றால் என்ன?

நிய்யத் என்றால் மனதில் தீர்மானித்தல். எந்தத் தொழுகையைத் தொழுகிறோம் (உதா. ஃபர்ளா, சுன்னத்தா?), எந்த நேரத்தில் தொழுகிறோம் (உதா. ளுஹ்ரா அஸ்ரா?) என்பதை மனதில் வைத்துக்கொண்டு தொழுவது. இதைத் தனியாக நாவால் சொல்லி தொடங்கக் கூடாது. அது பித்அத்.

பாடம் 7

இரண்டு ரக்அத் தொழுகை ஒரு வருணனை

முன்னேற்பாடு:

1. வுளூ செய்து தயாராகுங்கள்.
2. எந்தத் தொழுகைக்காக நிற்கிறீர்கள் என்பதை மனதில் தீர்மானித்தபடி கிப்லாவை முன்னோக்கி நில்லுங்கள்.
3. உங்களுக்கு முன்பு தடுப்பு (சுத்ரா) ஒன்றை ஏற்படுத்துங்கள். அது குறைந்தது ஒரு சாண் உயரத்தில் இருக்க வேண்டும். சுவரோ, தூணோ, ஏதேனும் வேறு பொருளோ இருக்கலாம்.



பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறிக்கொண்டு, தரையில் முதலாவதாக இரண்டு கைகளையும் ஊன்றி, பிறகு இரண்டு முழங்கால்களையும், பிறகு நெற்றியையும் மூக்கையும் வையுங்கள். (இதுவே சஜ்தா.)





- உள்ளங்கைகள் இரண்டும் தரையில் பதிந்திருக்க வேண்டும். விரல்களைச் சேர்த்து வைக்க வேண்டும். முகத்திற்கு அருகில் வைக்க வேண்டும்.



- பாதங்களின் விரல்கள் கிப்லாவை நோக்கி இருக்க வேண்டும்.
- இரண்டு முழங்கைகள் தரையில் படுக்காதபடி இருக்க வேண்டும். அவை விலாப் புறங்களை விட்டும் விலகி இருக்க வேண்டும்.
- வயிறுடன் தொடைகள் ஒட்டக் கூடாது. தொடைகளின் பின்பகுதியுடன் கரண்டைக் கால்கள் ஒட்டக் கூடாது.

سُبْحَانَ رَبِّيَ الأَعلى

சுப்ஹான ரப்பியல் அஃலா (3 முறை) கூறுங்கள்.

(பொருள்: மிக்க உயர்ந்தோனாகிய என்னுடைய இரட்சகன் தூயவன். ஸஹீஹுல் புகாரீ 689)

- முன்பு போலவே தொழுது, இரண்டு சஜ்தாக்களை முடித்தபின் கடைசி இருப்பில் உட்காருங்கள். இச்சமயம் வலது பாதத்தை நிற்க வைத்து, இடது காலை வலது கெண்டைக் காலுக்குக் கீழ் நுழைத்து தரையின் மீது இடது புட்டத்தை வைத்து உட்காருங்கள்.



- தஷஹ்ஹுது, ஸலவாத்து, துஆ ஓதிவிட்டு ஸலாம் கொடுங்கள்.

ஒவ்வொரு நேரத் தொழுகைக்கும் ரக்அத்களின் எண்ணிக்கை

தொழுகைகள்	முன் சுன்னத்	ஃபர்ள்	பின் சுன்னத்
ஃபஜ்ர்	2	2	
ளுஹர்	2+2	4	2
அஸர்	2+2	4	
மஃரிப்	2	3	2
இஷா	2	4	2 வித்ர் 3 (அல்லது) 1
ஜுமுஆ	2 (தஹிய்யதுல் மஸ்ஜிது)	2 (வெள்ளிக் கிழமை ளுஹருக்குப் பதில்) 2	வீட்டில் 2 (அல்லது) மஸ்ஜிதில் 2+2

தொடக்கம்

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால்...

எல்லாக் காரியங்களையும் பிஸ்மில்லாஹ் சொல்லித் தொடங்க வேண்டும்.

- இதன் மூலம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறீர்கள். எதையும் செய்து முடிக்க ஆற்றல் வழங்கியவன் அல்லாஹ் தான்.
- இதுவே நபி ﷺ அவர்களுக்கு அல்லாஹ் சொன்ன முதல் கட்டளை என்பதால் அதைச் செயல்படுத்திய கூலியைப் பெறுவீர்கள்.

பாடம் 1

தூக்கத்திலிருந்து விழித்தவுடன்..

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் விழித்தெழுந்து அமர்ந்து, தமது கையால் தம் முகத்தில் தடவித் தூக்க(க் கலக்கத்)தைத் துடைப்பார்கள். *(ஸஹீஹுல் புகாரீ 183)*

நபி ﷺ அவர்கள் இரவில் தூக்கத்தைவிட்டு விழித்தால் பல் துலக்குவார்கள். *(ஸஹீஹுல் புகாரீ 245)*

நீங்கள் தூக்கத்தை விட்டு விழித்தால் தண்ணீரின் மூலம் மூக்கை மூன்று முறை நன்கு சிந்தி சுத்தம் செய்யுங்கள். நிச்சயமாக ஷைத்தான் மூக்குத்தண்டில் இரவு தங்கியிருக்கிறான். *(ஸஹீஹுல் புகாரீ 3295, ஸஹீஹ் முஸ்லிம் 403)*

10. மஸ்ஜிதிலிருந்து வெளியேறும்போது இந்த துஆவை ஓதுதல்:

اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ فَضْلِكَ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மின் ஃபள்லிக.

(பொருள்: அல்லாஹ்! உன் கிருபையிலிருந்து உன்னிடம் கேட்கிறேன். ஸஹீஹ் முஸ்லிம் 1286)

பாடம் 16

தூங்குவதற்கு முன்..

நீ உன் படுக்கைக்குச் செல்லும்போது தொழுகைக்காக வுளூ செய்வது போன்று வுளூ செய்துகொள். பிறகு உன் வலப்பக்கத்தின் மீது சாய்ந்து படு. *(ஸஹீஹுல் புகாரீ 6311)*

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் படுக்கைக்குச் சென்றால், வலப் பக்கத்தில் சாய்ந்து உறங்குவார்கள்.

(ஸஹீஹுல் புகாரீ 6315)

நீங்கள் படுக்கைக்குச் சென்றால் உங்கள் கீழங்கியின் ஓரத்தால் விரிப்பைத் தட்டிவிடுங்கள். ஏனெனில், அதில் என்ன (விஷ ஜந்து) ஒளிந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாது. பிறகு பிரார்த்தியுங்கள்:

بِاسْمِكَ رَبِّ وَضَعْتُ جَنْبِي وَبِكَ أَرْفَعُهُ إِنْ أَمْسَكْتَ نَفْسِي فَارْحَمْهَا وَإِنْ أَرْسَلْتَهَا فَاحْفَظْهَا بِمَا تَحْفَظُ بِهِ الصَّالِحِينَ.

பிஸ்மிக்க ரப்பீ வளஅத்து ஜன்பீ. வ பிக்க அர்ஃபஉஹு. இன் அம்ஸக்த்த நஃப்ஸீ ஃபர்ஹம்ஹா. வ இன் அர்ஸல்த் தஹா ஃபஹ்ஃபழ்ஹா பிமா தஹ்ஃபழு பிஹி இபாதக்கஸ் ஸாலிஹீன்.